# சம்மாந்துறை பிரதேச சபையின் 14 வது கூட்டறிக்கை
# 2019.04.09

சம்மாந்துறை பிரதேச சபையின் 14 ஆவது அமர்வு 2019.04.09 ஆம் திகதி செவ்வாய் கிழமை காலை 9.30 மணிக்கு சம்மாந்துறை பிரதேச சபையின் சபா மண்டபத்தில் தேசிய கீதம் மற்றும் இறை சிந்தனையுடன் கௌரவ தவிசாளர் ஏ.எம்.முஹம்மட் நௌசாட் அவர்களின் தலைமையில் ஆரம்பமானது.

### சமூகமளித்த கௌரவ உறுப்பினர்கள்

| | | |
|---|---|---|
| 01. ஜனாப். ஏ.எம்.எம் நௌசாட் | கௌரவ தவிசாளர் | அ.இ.ம.கா |
| 02. திரு. வீ. ஜெயச்சந்திரன் | கௌரவ உப தவிசாளர் | ஸ்ரீ.சு.க |
| 03. ஜனாப். ஐ.எல். நஜீம் | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 04. ஜனாப். எஸ்.எம்.எம். முஸ்தபா | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 05. ஜனாப். ஏ. அச்சி முஹம்மட் | கௌரவ உறுப்பினர் | ஸ்ரீ.சு.க |
| 06. ஜனாப். யூ.எல். அஸ்வர் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 07. திருமதி. ஆர். வளர்மதி | கௌரவ உறுப்பினர் | ஸ்ரீ.சு.க |
| 08. திரு. என். கோவிந்த சாமி | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 09. ஜனாப். ஏ.சி. முஹம்மட் சஹீல் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 10. ஜனாப். எம்.ரீ. பௌசுள்ளாஹ் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 11. ஜனாப். ஐ.எல்.எம். மாஹிர் | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 12. ஜனாப். ஏ.எம்.எம் றியாஸ் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 13. ஜனாப். ஏ.எல்.எம். ஜிப்ரி | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 14. ஜனாப். எஸ். நளீம் | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 15. ஜனாப். ஏ. யூசுப் லெவ்வை | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 16. திருமதி. கே.எம். இன்பவதி | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 17. திருமதி. எம்.எஸ். சரீபா | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 18. திருமதி. எஸ்.எம். சித்தி நிலுவ்பா | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 19. திருமதி. கே.எல். சிஹாமா | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 20. ஜனாப். வை.பீ.எம். முஸம்மில் | கௌரவ உறுப்பினர் | ஸ்ரீ.சு.க |

### சமூகமளித்த உத்தியோகத்தர்கள்

| | |
|---|---|
| 01. ஜனாப். எம்.ஏ.கே. முஹம்மட் | செயலாளர் |
| 02. திருமதி. ஏ.எல். நுஸ்றத் பானு | அலுவலக உதவியாளர் |

### கௌரவ தவிசாளர் ஏ.எம்.எம். நௌசாட்

பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ராஹீம். எல்லாப்புகழும் இறைவனுக்கே, எல்லோரையும் இந்த 14 வது அமர்வுக்கு வரவேற்றவனாக,

இந்த அமர்வின் முதல் அம்சமாக கடந்த கூட்டறிக்கை சமர்ப்பித்தலும் அங்கீகாரம் பெறலும். இந்தக் கூட்டறிக்கையில் ஏதாவது திருத்தங்கள் இல்லாவிடில் ஒருவர் பிரேரித்து ஆமோதிக்கலாம்.

### தீர்மானம் 01

சென்ற மாதக் கூட்டறிக்கையினை ஏற்றுக் கொள்வதற்கு சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.சி.எம். சஹீல் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | என். கோவிந்தசாமி |

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
சென்ற மாதத்தில் இருந்து இம் மாதம் வரை சபையில் ஆளணி தொடர்பாக பாரிய பிரச்சினை உள்ளது. தொழிலாளர்கள் மாத்திரமல்ல நிர்வாகத்தில் உள்ள ஊழியர்களின் செயற்திறமைகள் அனைத்தும் தாமதமாகின்றது. சபைத் தீர்மானம் எடுத்தும் ஒரு மாதகாலத்ததிற்குள் நிறைவேற்றக்கூடிய ஆழுமை நமது சபையில் இல்லாமல் உள்ளது. இதற்குக் காரணம் புதிதாக இடமாற்றம் பெற்று வந்தவர்களுக்கு அனுபவம் போதாமல் இருக்கலாம். அவைகளைக் கவனத்தில் கொண்டு கௌரவ ஆளுணரிடம் பரஸ்பர இடமாற்றம் 02 பேருக்கு முயற்சி எடுக்கப்பட்டது. ஒருவருக்கு ஆளுணரின் அனுமதி எடுத்தும் அதனை நடைமுறைப்படுத்தாமல் அனுமதிக்க முடியாது என்று வந்துள்ளது. மீண்டும் ஆளுணரை சந்தித்து அதற்குரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கம்பெரலிய திட்டத்தின் மூலம் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. எங்களிடம் எந்தவிதமான அறிவித்தலும் இல்லாமல் வேலைகள் செய்கின்றார்கள். இது தொடர்பாக நான் பிரதேச செயலாளரிடமும் கூறியுள்ளேன். அதாவது பாதைகளுக்கான மதிப்பீட்டறிக்கை தயாரிக்கப்படும் போது பிரதேச சபையின் தொழில்நுட்ப உத்தியோகத்தரையும், அந்தந்த வட்டாரத்தின் உறுப்பினர்களின் ஆலோசனைகளையும் பெற்று மதிப்பீட்டறிக்கை தயாரித்த பின்னரே அவைகளை செயற்படுத்த வேண்டும் என்று வேண்டியுள்ளேன். அவ்வாறு செய்யாமல் அவர்கள் நினைத்தமாதிரி வீதிகளை செய்து கொண்டு வந்தால் பின் மழைகாலங்களில் நீர் வழிந்தோடுவதில்லை என்று பொது மக்கள் சபையிடம்தான் முறையிடுவார்கள். எனவே நாம் இதனை சபைத் தீர்மானமாக எடுத்து எதிர் வரும் பிரதேச அபிவிருத்திக் குழுக் கூட்டத்திலும் உரையாட வேண்டும்

**கௌரவ உப தவிசாளர் வீ. ஜெயச்சந்திரன் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, பிரதேச சபையின் தொழில் நுட்ப உத்தியோகத்தர் அவ்விடத்திற்குச் செல்லலாம். நாங்கள் சென்றால் பல பிரச்சினைகள் வருகின்றது. அதனால் பொலிசுக்குக் கூட செல்லக்கூடிய நிலை வருகின்றது. கௌரவ உறுப்பினர் சரீபா அவர்களுக்கும் அச்சுறுத்தல்கள் வந்தது. அதே போல் எனக்கும் பல அச்சுறுத்தல்கள் வருகின்றது. அரசியல் தலைவர்களால் செயற்படுத்தும் வேலைத் திட்டங்களுக்கு நாங்கள் சில ஆலோசனைகளைக் கூறுகின்ற போது எங்களுக்கு அச்சுறுத்தல்கள் வருகின்றது. எனவே, பிரதேச செயலகத்தினால் செய்யப்படும் அபிவிருத்தி வேலைகளுக்கான மதிப்பீட்டறிக்கை தயாரிக்கும் போது அந்தந்த வட்டாரத்தின் உறுப்பினர்களை உள்வாங்க வேண்டும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
நானும் இதே விடயத்தைத்தான் கூறுகின்றேன். அதாவது ஒரு வட்டாரத்தில் பாதை அபிவிருத்தி வேலைகள் நடைபெறுகின்றதென்றால் அப்பாதையில் உள்ள பிரச்சினைகள் பற்றி வட்டார உறுப்பினருக்குத்தான் தெரியும். அதனால் அவர்களை உள்வாங்கி அவர்களது ஆலோசனைகளையும் பெற்று மதிப்பீட்டறிக்கை தயாரிக்க வேண்டும்.

**கௌரவ உப தவிசாளர் வீ. ஜெயச்சந்திரன் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, ஆலோசனை வழங்குவதற்கு அவ்விடத்திற்குச் செல்லும் போது அவ்வீதியை யார் கொண்டு வந்தாரோ அவரின் ஆதரவாளர்கள் எம்மை எதிரிபோல் பார்க்கின்ற நிலமை இருக்கின்றது. அன்மையில் வளத்தாப்பிட்டியில் பாராளுமன்ற உறுப்பினர் கோடீஸ்வரனின் நிதி ஒதுக்கீட்டில் பாலர் பாடசாலைக்கு முன்னுள்ள வீதி அமைக்கப்பட்டது. இவ்வேலைத் திட்டத்தினை நிந்தவூரைச் சேர்ந்த 02 கொந்தராத்துக்காரர்கள் நடைமுறைப்படுத்த வந்தனர். அவர்களுக்கு வீதியின் நிலமை தெரியாமல் ஆரம்பத்திலேயே வடிகானை அமைத்து விட்டனர். வடிகான் வீதி மட்டத்தை விட அரை அடி உயரமாக போடப்பட்டுள்ளது. பின்னர் கிறஸ்சர் தூளை இட்டு வீதியை உயர்த்தி தற்போது கானுக்குள் நீர் வடிந்து செல்லக்கூடியவாறு அமைத்துள்ளார்கள். இவைகளைக் கூறச் சென்றால் எங்களுக்கு அச்சுறுத்தல் விடுக்கின்றார்கள்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
உங்களுக்கு அவ்விடங்களுக்கு செல்கின்ற போது ஏதாவது அசௌகரியங்கள் ஏற்பட்டால் அப்பாதையில் உள்ள பிரச்சினைகளை எழுத்து மூலம் சபைக்கு அல்லது சபைக்கு பிரதியிட்டு பிரதேச செயலகத்திற்கு அனுப்பிவைக்கலாம். அதற்கு அவர்கள் நடவடிக்கை எடுக்காவிட்டால் இறுதியில் அதற்கான அனுமதிக்கு சபையிடம் வரும்போது நாம் அதற்குரிய நடவடிக்கையை மேற்கொள்ளலாம். ஏனென்றால் ஊருக்காக செய்கின்ற அபிவிருத்திகளில் ஏதாவது பிழைகள் நடந்தால் பிரதேச சபையினையே பாதிக்கும்.

**கௌரவ உறுப்பினர் ஏ. யூசுப் லெவ்வை அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, வேலைத்திட்டம் சம்பந்தமாக கூறிய அறிவுறைகளை நான் ஏற்றுக் கொள்கின்றேன். தற்போது ஐக்கிய தேசிய கூட்டணி நாட்டில் இருந்து கொண்டிருக்கின்றது. அதன் மூலம் நமது நாட்டு மக்களுக்கு அவர்களது கிராமமட்ட அடிப்படையில் இருக்கின்ற பிரச்சினைகளை எடுத்து முன்னேற்ற வேண்டும் என்ற காரணத்திற்காக கம்பரலிய திட்டத்தின் மூலமாகவும், கிராமமட்ட அபிவிருத்தி திட்டத்தின் மூலமாகவும் வீதிகள் தெரிவு செய்யப்பட்டு பாரிய அளவில் இந்நாட்டு அபிவிருத்திக்காக செலவிடுகின்றது. அந்தவகையில் நீங்கள் கூறியது போன்று கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் மன்சூர் அவர்கள் மூலமும், கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் இஸ்மாயில் மூலமும், ஐக்கிய தேசியக் கட்சி சார்பாக என் மூலமாகவும் நமது ஊரின் அபிவிருத்தியை முன்னெடுப்பதற்காக பல வீதிகள் வந்துள்ளன.

இத்திட்டத்திற்கான சுற்றறிக்கையின் பிரகாரம் அதிகமான வேலைகள் இருக்கின்ற இடத்தில் அரசாங்கத்தில் கடமையாற்றுகின்ற எந்த ஒரு தொழில்நுட்ப உத்தியோகத்தராலும் மதிப்பீட்டறிக்கை பெற முடியும் என்று தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. இருந்த போதிலும் என்னைப் பொறுத்தவரையில் நமது சபையில் இருக்கின்ற போதே 02 கோடி ரூபாவுக்கான ஒதுக்கீட்டை நான் பெற்றிருக்கின்றேன். விரைவில் அப்பாதைகள் செயற்பட உள்ளது. அதில் ஹிஜ்றா 01 ஆம் வீதிக்கு காபட் இடுவதற்கு இருக்கின்றேன். ஏனைய 14 பாதைகள் நமது ஊரின் மல்வத்தை, வளத்தாப்பிட்டி, மஜீட் புரம் உட்பட சம்மாந்துறையின் ஏனைய பகுதிகளிலும் உள்ள பாதைகள் எடுக்கப்பட்டுள்ளது.

இவைகளை மேற்கொள்ளும் போது பல சிரமங்களை எதிர்கொண்டேன். காரணம் நான் எடுத்துச் செல்கின்ற பாதை வேறு ஒரு பாராளுமன்ற உறுப்பினரால் கொண்டு வரப்பட்டுள்ளது என்று கூறி அரைவாசிக்கு மேற்பட்ட பாதைகள் நிராகரிக்கப்பட்டது. அப்போது பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தரிடம் இப்பாதைகள் அபிவிருத்தி செய்யாவிட்டால் அதற்கு நீங்கள்தான் பொறுப்பானவர் என்று பொது மக்களிடம் கூறுவேன் என்று கூறியதும், சில பாதைகளை எனக்குத் தந்தார்கள். யார் எதைச் செய்து விட்டுப் போனாலும் இறுதியில் பிரதேச சபையையும், தவிசாளரையும் குற்றம் கூறுவதாகத்தான் இருக்கும். சுற்றறிக்கையில் குறிப்பிட்டவாறு பிரதேச செயலகத்தின் தொழில்நுட்ப உத்தியோகத்தர் மதிப்பீட்டறிக்கை தயாரித்தாலும் எமது பிரதேச சபையின் தொழிநுட்ப உத்தியோகத்தரையும் சேர்துக்கொள்ளப்பட வேண்டும் என்பது எனது கருத்து.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
பாதைகளை இனங்கானும் போது தயவு செய்து பிரதேச சபை தொழில்நுட்ப உத்தியோகத்தர் மூலமாக பாதைகளின் பெயர்களைக் கேட்டறியுங்கள். அவ்வாறு செய்யும் போது இப்பிரச்சினைகள் வராது. பாதைகளைப் பராமரிக்கின்ற பொறுப்பு பிரதேச சபைக்குத்தான் உள்ளது. எனவே, எந்தெந்தப்பாதை செய்யப்பட்டுள்ளது, எந்தெந்தப்பாதை செய்யப்படவில்லை என்பது பிரதேச சபைக்குத்தான் தெரியும். பிரதேச செயலகம் மத்திய அரசின் அபிவிருத்தி வேலைகள் செய்தாலும் பிரதேச சபையின் அனுமதி இல்லாமல் செய்ய முடியாது என்பதுதான் விதி.

**தீர்மானம் 02**
பிரதேச செயலகத்தினால் வீதி அபிவிருத்தி வேலைகளுக்கான மதிப்பீட்டறிக்கை தயாரிக்கும் போது சபையில் கடமையாற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தரினதும், அந்தந்த வட்டாரத்தின் அங்கத்தவர்களின் ஆலோசனைகளையும் பெற்று மதிப்பீட்டு அறிக்கை தயாரித்ததன் பின்னரே அவைகளைச் செயற்படுத்த வேண்டும் என சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | யூ.எல். அஸ்வர் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.சி. முஹம்மட் சஹீல் |

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
விஞ்ஞான பீடத்திற்கு பின் உள்ள வீதியில் நீர்பாசனத் திணைக்களத்திற்கான இடம் உள்ளது. ஒரு காலகட்டத்தில் அதனை பெண்கள் மத்ரசாவுக்கு ஒதுக்கியதாக கூறப்பட்டு வேலைகளை ஆரம்பிக்கும் போது அது தடுக்கப்பட்டது. தற்போது மீண்டும் இப்பிரச்சினை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக கௌரவ அமைச்சர் ஒருவரும் என்னிடம் பேசினார். பெண்கள் மத்ரசா கட்டணம் பெற்று பயிற்றுவிக்கின்ற ஒரு தனியாருக்குச் சொந்தமான நிறுவனம். அதற்கு அரச காணி வழங்குவதானால் பொது மக்களின் எதிர்ப்புக்கு மத்தியில் வழங்கக்கூடாது என்ற ஒரு நிலைப்பாடும் இருந்தது. அதே வேளை அப்பிரதேச மக்கள் அவ்விடத்தில் சிறுவர் பூங்கா வர வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்துள்ளார்கள். அதனை தனியார் நிறுவனத்திற்கு வழங்குவதற்கு அங்கீகாரம் வழங்க முடியாது என எழுத்து மூலம் தெரிவித்துள்ளேன்.

பஸ் தரிப்பிடம் அமைப்பதற்கு நகர திட்டமிடல் அமைச்சுக்கும் பல்நோக்கு கூட்டுறவு சங்கத்திற்கும் இடையில் ஒப்பந்தம் செய்வதற்காக சபைக்கு அனுப்பப்பட்டுள்ளது. பஸ் தரிப்பிடம் கட்டி முடிந்தவுடன் அதனைப் பராமரிப்பதற்கு பிரதேச சபைக்கு வருவதனால் சபையின் அங்கீகாரத்தோடு ஒப்பந்தத்தில் கையொப்பம் இடுவதற்கு உங்களின் அனுமதியைக் கோருகின்றேன்.

பல்நோக்கு கூட்டுறவு சங்கத்தின் நிர்வாகம், காணியை பஸ் தரிப்பு நிலையம் அமைப்பதற்கு தர முடியாது என்று அவர்கள் எழுத்து மூலம் சபைக்கு அறிவித்திருந்தார்கள். பராமரிப்பு இல்லாமல் இருக்கும் அரச காணியை பஸ்தரிப்பு நிலையம் நிறுவுவதற்காக பிரதேச சபைக்கு பாரம் தரும்படி பிரதேச செயலகத்திற்கு எழுத்து மூலம் அறிவித்திருக்கின்றேன். எதிர்வரும் பிரதேச அபிவிருத்திக் குழு கூட்டத்திலும் இது பற்றி பேசப்படும். பல்நோக்கு கூட்டுறவு சங்கத்தையும் பங்காளியாக சேர்த்து செய்வதற்கு சபை முயற்சி எடுத்தது. ஆனால் அவர்கள் வெவ்வேறு காரணங்களுக்காக பொதுத் தேவைக்கு தர முடியாது என்று மறுத்ததனால் சட்டத்தினூடாக பிரதேச சபையின் சொத்தாக மாற்றி பொதுத் தேவைக்காக பஸ்தரிப்பு நிலையம் இஸ்தாபிப்பதற்காக முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

**தீர்மானம் 03**
பஸ் தரிப்பிடம் அமைப்பதற்கு பல்நோக்கு கூட்டுறவு சங்கத்தின் பராமரிப்பின் கீழ் உள்ள இனங்கானப்பட்ட அரச காணியை பிரதேச சபைக்கு தரும்படி பிரதேச செயலாளருக்கு எழுத்து மூலம் அறிவித்தல் வழங்குவதற்கு சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | யூ.எல். அஸ்வர் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.சி. முஹம்மட் சஹீல் |

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
சம்மாந்துறை பிரதேச சபை எல்லைக்குள் இருக்கும் அரச காணியில் பராமரிப்பு இல்லாமல் இருக்கும் கட்டடங்கள் அனைத்தும் சபைக்கு சொந்தமாக்க வேண்டும் என பிரதேச செயலகத்திற்கு நேற்று எழுத்து மூலமான கடிதம் ஒன்று அனுப்பப்பட்டுள்ளது.

**கௌரவ உப தவிசாளர் வீ. ஜெயச்சந்திரன் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, வளத்தாப்பிட்டியில் 1994 ஆம் ஆண்டு மர்ஹூம் MHM.அஸ்ரப் அவர்களினால் அமைக்கப்பட்ட கட்டடத்தில் சனசமூக நிலையம், சுகாதார நிலையமும் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றது. பல்நோக்கு கூட்டுறவு சங்கத்தினை ஒரு காலகட்டத்தில் கௌரவ உறுப்பினர் கோவிந்த சாமி அவர்களினால் பொருட்கள் விநியோகிக்கப்பட்டன. பின்னர் சம்மாந்துறை கூட்டுறவுச் சங்கத்தினால் நடைமுறைப்படுத்தப்படாமல் மூடிவிட்டனர். தற்போது மாதம் ஒன்றுக்கு 200 ரூபா வாடகை என்ற அடிப்படையில் செலுத்தி அதனைப் பராமரித்து வருகின்றோம்.

தபாலகத்தைப் பொறுத்தவரை பல முயற்சிகள் செய்தும் அவை கைகூடவில்லை. எனது சொந்த முயற்சியில் சிரமதானம் செய்தோம். ஆனால் தொடர்ந்தும் அதனை எங்களால் பராமரிக்க முடியாத நிலை இருக்கின்றது. இது தொடர்பாக நாங்கள் தபால் திணைகளத்திடம் கூறிய போது அவர்களது கட்டடம் இல்லை என்று கூறினார்கள். பிரதேச செயலாளரும் அவ்வாறே கூறினார். எனவே, அதனை எமது சபைக்குள் கொண்டுவருவது சிறந்த விடயமாகக் கருதுகின்றேன்.

**கௌரவ உறுப்பினர் என். கோவிந்தசாமி அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, வளத்தாப்பிட்டியில் உப தபாலகம் அமைக்கப்பட்டுள்ளது. அது நீண்ட காலமாக இயங்காமல் இருக்கின்றது. அதே நேரத்தில் மல்கம்பிட்டியில் உப தபாலகம் இருக்கின்றது. அதில் இருக்கின்ற உப தபால் அதிபரை 02 நாளைக்கு வளத்தாப்பிட்டிக்கும் 03 நாளைக்கு மல்கம்பிட்டிக்கும் சென்று வேலை செய்யக்கூடியவாறு நாங்கள் ஏற்பாடு செய்ய வேண்டும்.

மஜீட்புரத்தில் தபால் பெட்டி ஒன்றை வைக்க வேண்டும். எதிர்காலத்தில் மல்வத்தை உப தபாலகம் தபாலகமாக உயர்த்தப்படும் போது மஜீட்புரம், வளத்தாப்பிட்டியில் உள்ள தபாலகங்களை உப தபாலகமாக மாற்றக்கூடிய வாய்ப்பினை ஏற்படுத்தலாம் என நான் தபால் உயர் அதிகாரிகளுடன் இது பற்றிப் பேசிய போது மேற்கூறியவாறு கூறினார். அதனை நாம் எதிர்காலத்தில் அவ்வாறு செய்வதன் மூலம் வளத்தாப்பிட்டி, மஜீட்புரம் இரண்டிற்கும் உப தபாலகத்தை உருவாக்கலாம் என தங்களது மேலான கவனத்திற்கு தெரிவிக்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
மேற்கூறிய விடயம் தொடர்பாக, என்ன வடிவில் வர வேண்டும் என்று செயலாளருடன் கலந்தாலோசித்து பிரேரனையாக சமர்ப்பியுங்கள். அதன் பின் இவ்வாறு தீர்மானம் எடுத்துள்ளோம் என்று எழுத்து மூலமாக அறிவிக்கலாம். பின்னர் அவர்கள் இது தொடர்பாக செயற்படும் போது நமது கடிதத்தையும் உள்வாங்குவார்கள். தபால் நிலையத்தை வருமானம் பெறக்கூடிய வியாபாரமாகத்தான் செயற்படுத்துகின்றார்கள். என்னைப் பொறுத்தவரையில் சம்மாந்துறை தபாலகத்தினை 2008 ஆம் ஆண்டு நான் பாராளுமன்ற உறுப்பினராக இருக்கும் போது ஒவ்வொரு அமைச்சிடமும் புதிய தபாலகக் கட்டடம் அமைப்பதற்கு முயற்சி எடுத்தும் முடியவில்லை.

இன்று மின்சார சபை நிறுவுவதற்கு கட்டடம் கட்டுவதற்கு நிலம் இல்லாமல் உள்ளது. அதனை மையமாக வைத்து தற்போது இருக்கின்ற தபாலகத்தில் ஒரு கட்டடத்தை உருவாக்கி அதில் ஒரு பகுதியை தபாலகத்திற்கு ஒதுக்கீடு செய்தால் அவ்விடம் சிறப்பாக அமையும். ஏனென்றால் அவ்விடத்தில் பொலிஸ் நிலையம், பிரதேச செயலகம், தபாலகம், மின்சார சபை என்று அனைத்தும் ஒரு இடத்தில் இருப்பதனால் மக்களுக்கும் இலகுவாக அவர்களது தேவைகளைப் பூர்த்தி செய்யலாம். இது தொடர்பாக பிரதேச அபிவிருத்திக் குழுக் கூட்டத்திலும் பேச வேண்டும்.

**கௌரவ உறுப்பினர் ஏ. யூசுப் லெவ்வை அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, தபால் திணைக்களம் சம்பந்தமாக இதற்கு முன்னரும் சபையில் பேசியுள்ளோம். அதே நேரத்தில் எமது சம்மாந்துறையை பொறுத்தவரையில் பாரிய ஊர் அதன் அடிப்படையில் சம்புமடு தபாலகம் அதற்குரியது. அது பல காரணங்களால் இங்கு இருந்தாலும்

அதன் வியாபாரத்தின் அவசியத் தன்மை திணைக்களத்திற்கு திருப்தியாக இருப்பதனால் அவ்விடத்தில் இருக்கின்றது.

அதனை அங்கு கொண்டு செல்வதற்கு பல முயற்சிகள் எடுத்தும் கைகூடவில்லை. சம்புமடு உப தபாலகத்தினை தபாலகமாக தரம் உயர்த்தி விட்டு தபால் அதிபருக்கும் இடம் கொடுக்க வேண்டும். அந்த இடத்திற்கு வளாத்தாப்பிட்டி மக்களுக்கு ஒரு சேவையாக உப தபாலகத்தை அமைக்கலாம். புதிதாக திணைக்களம் உப தபாலகங்களை நிறுவ மாட்டாது. எமது அஞ்சல் அலுவலகம் இருக்கின்ற வளவு தற்போது யாருடைய நிர்வாகத்தில் இருக்கின்றது என்பதை நான் விளக்கமாக அறிய வேண்டும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
சம்மாந்துறையில் இருக்கின்ற பல அரச நிறுவனங்களின் காணி அதே நிறுவனங்களுக்கு கொடுக்கப்படவில்லை.

**கௌரவ உறுப்பினர் ஏ. யூசுப் லெவ்வை அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, நான் தங்களிடம் வேண்டிக் கொள்வது தபாலகம் அமைந்திருக்கின்ற இடத்தை பிரதேச சபையின் சொத்தாக எடுத்து தபால் திணைக்களத்திற்கு மாற்றம் செய்து கொடுத்தால் நீங்கள் கூறிய கட்டடத்தை அமைப்பதற்கு எமது திணைக்களம் நிச்சயமாக செய்து தரும் என்பதை நான் கௌரவ அமைச்சின் செயலாளருடன் பேசிய போது விளங்கிக் கொண்டேன்.

**தீர்மானம் 04**
சம்மாந்துறை பிரதேசத்திலுள்ள தற்போது பாவிக்கப்படாது அல்லது பராமரிக்கப்படாதுள்ள பொதுக் கட்டடங்கள், பொது காணிகளை பிரதேச சபையின் பராமரிப்பிற்காக கையளிப்பதற்கு பிரதேச செயலகத்திடம் கோருவது என சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | யூ.எல். அஸ்வர் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எம்.ரீ. பௌசுள்ளாஹ் |

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
I Road வீதிகள் தெரிவு செய்யப்பட்டு வந்துள்ளது. உங்களுக்கு பிரதிகள் வழங்கப்படும் அது தொடர்பான தெளிவுகளை பெற்றுக் கொள்ளலாம்.

**தீர்மானம் 05**
பிரதேச சபையினால் அறவீடு செய்யப்படும் அறவீடுகளை கீழ்வரும் தொகைக்கேற்ப அறவீடு செய்வதற்கு சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

01. ஆதனவரி அறவீடு - 07 வீதம் - தை மாதம் 31 ஆம் திகதிக்கு முன் செலுத்துவோருக்கு 10 வீதம் களிவும் காலாண்டு தவைணைக்கட்டணம் முதல் மாதத்தில் செலுத்தப்பட்டால் 5வீதம் களிவும் வழங்கப்படும்
02. ஆதனவரி பெயர் மாற்ற விண்ணப்பப் படிவம் - ரூபா 100
03. ஆதனவரி பெயர் மாற்ற கட்டணம் - ரூபா 500
04. மாடு அறுப்புக் கட்டணம் - 200 + Vat ஆடு 100 + Vat
05. கட்டட விண்ணப்பப் படிவக் கட்டணம் - ரூபா 200 + Vat
06. தெரு அத்தாட்சிப் பத்திர கட்டணம். - 500 + Vat

07. சூழல் பரிசோதனைக் கட்டணம் முதலீட்டுத் தொகை
    I. 250,000 ரூபா அல்லது அதற்குக் கீழ் 3000 + Vat

II. 250,001 ரூபா - 500,000 ரூபா 3750 + Vat
III. 500,001 ரூபா – 1,000,000 ரூபா 5000 + Vat
IV. 1,000,000 ரூபா இற்கு மேல் 10,000 + Vat

08. சூழல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் புதுப்பித்தல் - 4,000 + Vat
09. JCB - Backhoe Loader வாடகை 01 மணித்தியாலம் - 3,500 + Vat
10. Motor Grader வாடகை 01 மணித்தியாலம் - 3,792.53 + Vat
11. Roller வாடகை
    I. 01 Ton Roller ஒரு நாளைக்கு - 3,500 + Vat
    II. 03 Ton Roller 06 Hr - 9750.00 + Vat
    III. 03 Ton Roller ½ நாள் (03 Hr) – 4875.00 + Vat
12. ஜனாசா வாகனம் வாடகை - 1 Km 20 ரூபா Vat
13. Water Bowser வாகை
    I. 8000L - 6000 + Vat
    II. 6000L - 5000 + Vat
    III. 4000L - 2250 + Vat
14. நீர் இணைப்புக் கட்டணம்
    I. 1 அடி - 5 அடி - 575 ரூபா 5 இற்கு மேற்பட்டால் ஒவ்வொரு அடிக்கும் 100 + Vat
15. விளையாட்டுக் கட்டடத் தொகுதி
    I. தங்குவதற்கு ஒரு இரவைக்கு ஒருவருக்கு 100 ரூபா
    II. நீச்சல் தடாகம் ஒரு மணித்தியாலத்திற்கு சிறுவர்களுக்கு 30 ரூபாவும் 18 வயதிற்கு கீழ் பட்டவர்களுக்கு 50 ரூபாவும், 18 வயதிற்கு மேற்பட்டவருக்கு 100 ரூபாவும்
    III. Badminton ஒரு மணித்தியாலத்திற்கு - 50 ரூபா
    IV. Table Tennis ஒரு மணித்தியாலத்திற்கு - 50 ரூபா
    V. Carrom Board ஒரு மணித்தியாலத்திற்கு - 100 ரூபா
    VI. ஒரு மண்டபம் உபயோகிப்பதற்கு - 5000 ரூபா (ஒரு நாளைக்கு)
    VII. மண்டபங்களும் மைதானமும் உபயோகிப்பதற்கு - 15000 ரூபா (ஒரு நாளைக்கு)
    VIII. ஒரு மண்டபமும் விளையாட்டு மைதானமும் உபயோகிப்பதற்கு - 10000 ரூபா
16. நூலக அங்கத்தவர் கட்டணம் - 100 ரூபா
17. நூலக அங்கத்தவர் புதுப்பித்தல் - 100 ரூபா
18. தண்டப் பணம் (நாள் ஒன்றிற்கு) - 5 ரூபா
19. நூலக அங்கத்தவர் படிவம் - 20 ரூபா
20. விளையாட்டு மைதானம் (நாள் ஒன்றிற்கு) - 500 ரூபா + Vat
21. அப்துல் மஜீட் மண்டப வாடகை
    I. வைப்பு - 5000 ரூபா
    II. 1 மணித்தியாலயத்திற்கு - 1500 ரூபா + Vat
    III. 1 நாளைக்கு - 15000 ரூபா + Vat
    IV. ஒலி பெருக்கி ஒரு நாளைக்கு உபயோகிப்பதற்கு - 3000 ரூபா + Vat
    V. Multi Media ஒரு நாளைக்கு உபயோகிப்பதற்கு - 3000 ரூபா + Vat
22. பட வரைஞர் அனுமதிக் கட்டணம் - 1000 ரூபா + Vat
23. திண்மக்கழிவு சேவைக் கட்டணம்

    I. சமுர்த்தி பெறுபவர்களுக்கு ஒரு மாதத்திற்கு - 30 ரூபா
    II. சமுர்த்தி பெறாதவர்களுக்கு ஒரு மாதத்திற்கு - 50 ரூபா

III. வியாபார நிலையம் ஒரு மாதத்திற்கு - 100 ரூபா

IV. மாடி வீட்டுக்கு ஒரு மாதத்திற்கு - 75 ரூபா

* மார்ச் 31 இற்கு முன் சேவைக் கட்டணத்தை செலுத்தினால் 10 வீதம் கழிவு வழங்கப்படும்.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஆர். வளர்மதி |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.சி. முஹம்மட் சஹீல் |

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
ஹிஜ்ரா பொதுச் சந்தை இலக்கம் 02 இறைச்சிக் கடைக்கு மீள் விலைமனு கோரியும் எவரும் விண்ணப்பிக்காததனால் இரண்டாவது தடைவை சபையின் அனுமதியை பெற்று விலை மனு கோர வேண்டும். அதற்கும் விண்ணப்பிக்காவிட்டால் ஏலத்தில் விடவேண்டும்.

**கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம். மாஹிர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, இறைச்சிக் கடைக்காரருக்கு பொருளாதார ரீதியில் பாரிய நஸ்டத்தை ஏற்படுத்தியுள்ளோம். ஆகவே அவருக்கே அதனை வழங்க முடியாதா?

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
அதற்கு சொந்தமானவர் என்னுடன் நெருக்கமானவர் அவ்வாறு இருந்தாலும் அச் செயல் ஏற்படுத்திய தாக்கம் மீண்டும் அவர்களிடம் வழங்குகின்ற போது நமக்கு எதிராக இயங்கலாம்.

**கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம். மாஹிர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, அவருக்குரிய தண்டனை வழங்கப்பட்டுள்ளது. அதாவது அவரது கடையை சீல் வைத்து அவர் அடையாளம் காட்டப்பட்டுள்ளார். பொருளாதார ரீதியிலும் நஸ்டத்தை பெற்றுள்ளார். பொது மக்களுடைய சேவையை பெற்றுக் கொள்ள முடியாமல் இருப்பதனால் அதனை இன்னும் காலதாமதம் ஏற்படுத்தாமல் அவருக்கே வழங்கலாம் என்பது எனது கருத்து.

**கௌரவ உறுப்பினர் யூ.எல். அஸ்வர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, இறைச்சிக்கடை விடயத்ததை மீண்டும் மீண்டும் பேச முடியாது. ஏற்கனவே தீர்மானம் எடுத்து விட்டோம். மீண்டும் இதனை அவருக்கே கொடுத்தால் அதே பிழையை செய்தாலும் இவ்வாறே சரியாகிவிடும் என்று நினைத்துவிடுவார்கள். இந்தமாதமும் இரண்டாவது தடவை விலைமனுக் கோரலாம். அதற்கும் விண்ணப்பிக்காவிட்டால் எதிர்வரும் மாதத்தில் ஒரு முடிவை எடுக்கலாம்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
நாம் இரண்டாவது தடைவ விலைமனுக் கோரலாம் அதற்கு விண்ணப்பிக்காவிட்டால் பிராந்திய உள்ளுராட்சி உதவி ஆணையாளருடன் கலந்தாலோசித்து செயற்படலாம். காரணம் நாம் உடனடியாக நடவடிக்கை எடுத்ததற்கு பள்ளிவாசல் நிர்வாகிகள் நமது செயலைப் பாராட்டி கடிதம் அனுப்பியுள்ளார்கள். அவரின் 12 இலட்சம் ரூபா பணம் எமது சபையில் உள்ளது. ஆனால் இதனை மனச்சாட்சியுடன் செயற்பட வேண்டும். அதற்காகத்தான் மேற்கூறிய நடவடிக்கை எடுக்கப்பட்டது.

**கௌரவ உறுப்பினர் எம்.எஸ். சரீபா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, மன்னிப்பு என்பதற்கு ஓர் இடம் இருக்கின்றது. அந்தவகையில் அவர் மன்னிப்புக் கோருகின்ற பட்சத்தில் அதனை நாம் மன்னித்து மீண்டும் அந்தத் தவறை செய்யக்கூடாது என்று கூறி அவருக்கே இறைச்சிக்கடையைக் கொடுக்க முடியாதா? ஏனென்றால் பொருளாதார ரீதியில் அவருக்கு நஸ்டம் ஏற்பட்டுள்ளது. அதனையே அவருக்குரிய தண்டனையாக எடுத்து நாம் மக்கள் மத்தியில் விமர்சனத்தை ஏற்படுத்தாமல் மன்னிப்பு என்ற ரீதியில் மீண்டும் வழங்கலாம் என்பது எனது கருத்து.

**கௌரவ உறுப்பினர் ஏ.சீ.எம். சஹீல் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, கௌரவ உறுப்பினர் சரீபா அவர்கள் கூறியவாறு அவர் ஏற்றுக்கொண்ட குற்றத்தை மன்னித்து அவருக்குரிய பொருளாதார நெருக்கடியில் இருந்து விடுவிக்க வேண்டும் என கேட்டுக் கொள்கின்றேன்.

**தீர்மானம் 06**
ஹிஜ்றா பொதுச்சந்தை இறைச்சிக்கடை இலக்கம் - 02 தொடர்பாக மீள் விலைமனுக் கோரிய போதும் எவரும் விண்ணப்பிக்காத காரணத்தினால் இது தொடர்பாக 02 வது விலை மனுக் கோரிய பின் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளரிடம் ஆலோசனை பெற்று அதற்கேற்ப செயற்பட சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

பிரேரித்தவர் : கௌரவ உறுப்பினர் யூ.எல். அஸ்வர்
ஆமோதித்தவர் : கௌரவ உறுப்பினர் ஏ.எல்.எம். ஜிப்ரி

**தீர்மானம் 07**
HW 4157 உழவு இயந்திரம், 49 - 3938 உழவு இயந்திரம், LE - 7441 மஹேந்திரா கெப் போன்றவற்றின் டயர்களை மாற்றம் செய்வதற்கும் LE - 7441 மஹேந்திரா கெப் வாகனத்தினை திருத்தம் செய்வதற்கும் சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

பிரேரித்தவர் : கௌரவ உறுப்பினர் யூ.எல். அஸ்வர்
ஆமோதித்தவர் : கௌரவ உறுப்பினர் எம்.ரீ. பௌசுள்ளாஹ்

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
ஜனாதிபதி விளையாட்டுக் கட்டடத் தொகுதியின் கேட்போர் கூடத்தினைப் பாவித்த SLIATE உத்தியோக பூர்வமாக பாரம் தந்துள்ளார்கள். அதற்குரிய திருத்த வேலைகளைச் செய்து அதற்குத் தேவையான உபகரணங்களையும் கொள்வனவு செய்ய வேண்டும்.

**தீர்மானம் 08**
ஜனாதிபதி விளையாட்டுக் கட்டடத் தொகுதியின் கேட்போர் கூடத்தினைப் பாவித்த SLIATE நிறுவனம் தற்போது தனது சொந்தக் கட்டடத்திற்கு சென்றுள்ளதால் குறித்த கட்டடத்தினை புனரமைப்பதற்கும், கேட்போர் கூடத்திற்கான ஆசனங்களை கொள்வனவு செய்வதற்கும், அங்குள்ள GYM நிலையத்திலுள்ள உபகரணங்களைத் திருத்தம் செய்வதற்கும் சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

பிரேரித்தவர் : கௌரவ உறுப்பினர் ஏ.எம்.எம் றியாஸ்
ஆமோதித்தவர் : கௌரவ உறுப்பினர் ஏ.எல்.எம். ஜிப்ரி

**தீர்மானம் 09**
சகல வட்டாரங்களையும் ஒன்றிணைந்த உள்ளூராட்சி நிறுவனத்திற்கான தேவைகளை முன்னுரிமைப்படுத்திய பங்குபற்றல் அபிவிருத்தித் திட்டத்தினை அனுமதித்து LADPD திட்டமாகத் தயாரிப்பதற்கும் அதனை செயற்படுத்துவதற்கும் சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

பிரேரித்தவர் : கௌரவ உறுப்பினர் ஏ.சி. முஹம்மட் சஹீல்
ஆமோதித்தவர் : கௌரவ உறுப்பினர் கே.எல். சிஹாமா்

**தீர்மானம் 10**
பிர்தௌஸ் பள்ளிவாசலுக்கு முன் உள்ள கல்வெட்டினை திருத்தம் செய்வதற்கு சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஐ.எல்.எம். மாஹிர் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எஸ். நளீம் |

**தீர்மானம் 11**
சென்ற மாதம் 2019.03.01 தொடக்கம் 2019.03.29 வரையிலான செலவீனங்களும் மற்றும் கொடுப்பனவுகளுக்குமான செலவு விபரங்களுக்கு அனுமதி வழங்க சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எம்.ரீ. பௌசுள்ளாஹ் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.எல்.எம். ஜிப்ரி |

## கௌரவ உறுப்பினர்களின் மனுக்கள் / பிரேரணைகள்

**கௌரவ உப தவிசாளர் வீ. ஜெயச்சந்திரன் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, எதிர் வரும் சித்திரை புத்தாண்டை முன்னிட்டு நாங்கள் புதுவருட விழா நடாத்துவது என்ற அடிப்படையில் 2013 ஆம் ஆண்டு மல்வத்தையில் மிகவும் கோலாகலமாக சித்திரைப் புத்தாண்டு இடம் பெற்றது. இதே போன்று 2015 ஆம் வருடமும் பிரதேச சபையின் அனுசரணையுடன் சித்திரைப் புத்தாண்டு நிகழ்வு இடம்பெற்றது. அந்த வகையில் இவ்வருடமும் சித்திரைப் புத்தாண்டை வளத்தாப்பிட்டியில் நடாத்துவதற்கு சபை மூலம் செயற்படுத்த வேண்டும் என்று எதிர்பார்க்கின்றோம். நாம் சர்வதேச மகளிர் தினத்தை வளத்தாப்பிட்டி மைதானத்தில் நடாத்துவதற்கு ஏற்பாடுகள் செய்தோம். அதிகமான வெப்பம் காரணமாக அதனை அப்துல் மஜீட் மண்டபத்தில் நடாத்தினோம்.

எனவே, வளத்தாப்பிட்டி மக்கள் பிரதேச சபையினால் சித்திரைப் புத்தாண்டு நிகழ்வுகள் நடாத்தப்படும் என்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். இதற்கு சபையின் அனைத்து கௌரவ உறுப்பினர்களும் ஒத்துழைப்பு வழங்கி அந்நிகழ்வுக்கு கலந்து கொள்ள வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
கௌரவ உப தவிசாளர் அவர்களின் பிரேரணையை ஆமோதித்தவனாக, சபையின் சரித்திரத்தில் 2012 ஆம் ஆண்டு மல்வத்தை பொது மைதானத்தில் 24 வது படை அணியின் உதவியுடன் மிகவும் கோலாகலமாக நடாத்தினோம். இந்தக் கிழமைக்குள் அவர்களுடன் மீண்டும் பேசி ஆமியையும் உள்வாங்கி, பிரதேச செயலாளருடனும் கலந்தாலோசித்து பொதுவான புதுவருட நிகழ்வினை மிகவும் கோலாகலமாக கொண்டாடலாம். இதற்கு சகல உறுப்பினர்களினதும் அனுசரணைகளை வழங்க வேண்டும்.

மாவட்டத்தில் தமிழ், முஸ்லிம்களுக்குள் அரசியல் நிர்வாகம் மாத்திரமல்ல பல இடங்களிலும் முறுகல் நிலை ஏற்படுகின்றது. அந் நிலவரம் சம்மாந்துறையில் இல்லை. இனிமேலும் வரக்கூடாது. சம்மாந்துறையில் வாழ்கின்ற சகல இன மக்களும் ஒற்றுமையாக விட்டுக்கொடுப்புடன் வாழ்கின்றோம் என்பதற்கு நாம் முன்னுதாரணமாக எடுத்துக்காட்ட வேண்டும். அதனால் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் வித்தியாசமாக நோக்கி அனைவரும் பங்குபற்றி ஒவ்வொரு இனத்தினதும் கலாசாரங்களை உள்வாங்கி செயற்படுத்துவதற்கு உங்கள் எல்லோரினதும் உதவியை நாடுகின்றேன்.

**கௌரவ உறுப்பினர் ஏ. யூசுப் லெவ்வை அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, சித்திரைப் புத்தாண்டு எதிர்வருகின்ற சபை அமர்வுக்கு முன் வருகின்றதனால் அனைவருக்கும் சித்திரைப் புத்தாண்டுக்கு வாழ்த்துகின்றேன்.

**கௌரவ உறுப்பினர் என். கோவிந்தசாமி அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, இதற்கு சிங்கள விளையாட்டு வீரர்களையும் சேர்த்துக் கொண்டால் சிறப்பாக அமையும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
அதற்காகத்தான் சனிக்கிழமை நடாத்துகின்றோம். சடயந்தலாவையில் உள்ள 18 குடும்பங்களையும் உள்வாங்குவதற்குரிய முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும்.

**தீர்மானம் 12**
தமிழ் சிங்களப் புத்தாண்டை முன்னிட்டு புத்தாண்டு விழாவினை சபையின் அனுசரனையுடன் எதிர்வரும் 2019.04.21 ஆம் திகதி வளத்தாப்பிட்டியில் நடாத்துவதற்கு சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உப தவிசாளர் | வீ. ஜெயச்சந்திரன் |
| ஆமோதித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.எம். நௌசாட் |

**கௌரவ உறுப்பினர் ஏ. அச்சி முஹம்மட் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, நான் சமாதான கல்வி இணைப்பாளராக இருக்கின்றேன். நாங்கள் அனைத்து நிகழ்வுகளுக்கும் மூவின மக்களையும் இணைத்துத்தான் செயற்படுத்துவது வழக்கம். நாம் அதிகமான செலவு செய்யக்கூடிய சந்தோசமான விடயங்களை செய்து கொண்டிருக்கின்றோம்.

தற்போது தண்டப்பணமாக வந்த காலத்தில் இதுவரைக்கும் எமது சபைக்கு எவ்வளவு பணம் வந்துள்ளது? ஏனென்றால் அதிகமான தண்டப்பணம் அறவிடப்படுகின்றது. கணக்காய்வுத் திணைக்களத்துடன் தொடர்பு கொண்டு நமக்குரிய வருமானத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டும். அளிப்பு உறுதிகளை மீண்டும் மற்றவரின் பெயருக்கு மாற்றும் போது கட்டணம் அறவிடப்படுகின்றது. அதற்கு அதிகமான கட்டணம் கொடுத்து மாற்றும் போது அதன் மூலமும் அதிகமான வருமானம் வரலாம். இவ்வாறான வருமானத்திற்குரிய வழிகளையும் தேடிக்கொள்ள வேண்டும்.

**கௌரவ உறுப்பினர் எம்.எஸ். சரீபா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, சபை ஆரம்பித்த போதும் மலையடிக்கிராமம் - 04 இல் அமைந்துள்ள பொதுச் சந்தைக் கட்டடம் பற்றிக் கூறியிருந்தேன். தற்போது அக்கட்டடம் பாவனையில்லாமல் இருக்கின்றது. அதில் தையல் பயிற்சி நிலையம் ஒன்றை நிறுவினால் சிறப்பாக இருக்கும். ஏனென்றால் மலையடிக்கிராமம் - 04 ஆம் பிரிவில் உள்ள மாதர் சங்கம் ஒன்றுக்கு வழங்கப்பட்ட தையல் இயந்திரங்களை பயிற்சி நிலையம் இல்லாத காரணத்தினால் அவருடைய வீட்டில் வைத்துக் கொண்டு பயிற்சிகளை வழங்குவதனால் பல சிரமங்கள் ஏற்படுகின்றது. ஏனென்றால் மக்கள் அதனை வேறு விதமாக விமர்சிக்கின்றார்கள். எனவே, அக்கட்டடத்தை தையல் பயிற்சி நிலையமாக திறந்து தந்தால் சிறப்பாக இருக்கும் என்று நினைக்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
நீங்கள் குறிப்பிட்ட கட்டடம் மர்ஹூம் MHM. அஸ்ரப் அவர்களது காலத்தில் ஊர் வளர்ந்து வருகின்ற போது அவ்விடத்தில் பொது சந்தை இருக்க வேண்டும் என்ற அடிப்படையில் அமைக்கப்பட்டது. அது பல காரணங்களுக்காக ஓய்ந்த நிலைக்கு வந்து தற்போது அவ்விடத்தில் மீண்டும் பொதுச் சந்தை ஆரம்பிக்க வேண்டும் என்று தீர்மானம் எடுத்திருந்தோம். அவ்விடத்தில் சந்தை வந்தால் சிறப்பாக இருக்கும் என்பது எனது அபிப்பிராயம்.

**கௌரவ உறுப்பினர் எம்.எஸ். சரீபா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, அவ்வட்டார மக்களின் அபிப்பிராயமும் அவ்விடத்தில் தையல் பயிற்சி நிலையம் வருவதனையே விரும்புகின்றார்கள். ஆகவே, மக்களின் தேவையைக் கருத்தில் கொண்டே அவ்விடத்தை தையல் பயிற்சி நிலையத்திற்குக் கேட்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
தையல் பயிற்சி நிலையம் என்று வரும் போது அதற்குச் சொந்தக்காரர்களாக சங்கம் வரும். அவர்களுக்கு வழங்குவதானால் அவர்களுடன் ஒப்பந்தம் செய்து வாடகை அடிப்படையில் தான் வழங்க வேண்டும். அல்லது வேறு ஏற்பாடு செய்ய வேண்டும். ஆனால், பொதுத் தேவைக்கு பாவிக்க வேண்டும் என்ற தீர்மானம் இருந்ததால் அதற்கு அப்பால் நாம் அதனை மீறி சங்கத்திற்கு வழங்குவது பொருத்தமானதா என்ற கேள்வியும் எளலாம்.

**கௌரவ உறுப்பினர் ஏ.எல்.எம். ஜிப்ரி அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, 07 சங்கங்களுக்கு இணைத்து தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளது. வேறு பகுதிக்கு செல்ல இருந்ததை நாங்கள் மிகவும் சிரமப்பட்டு எங்களது வட்டாரத்திற்குள் கொண்டு வந்தோம். பொதுச்சந்தை பாவனையில் இல்லாததனால் அதற்குள் பல தவறான செயல்கள் நடக்கின்றது. இது பற்றி பல தடவைகள் சபை அமர்வுகளிலும் கூறியுள்ளேன். அதற்கு அருகிலும் புரம் வளவு ஒன்று உள்ளது. அதனையும் இணைத்து நீங்கள் சந்தை அமைக்கலாம்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
பொதுச் சந்தையை இயங்க வைப்பதற்கு முயற்சி எடுப்போம். தவறும் பட்சத்தில் தையல் பயிற்சி நிறுவுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளலாம்.

**கௌரவ உறுப்பினர் எம்.எஸ். சரீபா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, தையல் பயிற்சி நிலையம் என்றில்லாவிட்டாலும் தொழிற்பயிற்சி நிலையமாக எடுத்தால் நாங்கள் அதில் நெசவுகளை அமைத்து மக்களுக்கு தொழிற்பயிற்சி வழங்கலாம்.

**தீர்மானம் 13**
மலையடிக் கிராமம் - 04 பொதுச்சந்தைக் கட்டடத்தினை இயங்க வைப்பதற்கு முயற்சிகளை மேற்கொள்வதற்கும், தவறும் பட்சத்தில் அக்கட்டடத்தில் தொழில் பயிற்சி நிறுவாகத்தினை நிறுவுவதற்கும் சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எம். எஸ் சரீபா |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.எல்.எம். ஜிப்ரி |

**கௌரவ உறுப்பினர் எஸ். எம்.எஸ். நிலுவ்பா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, இந்த மாதப் பிரேரனையாக கட்டாக்காலி மாடுகள் தொடர்பான பிரேரனை முன்வைத்தேன் இதில் சேர்க்கப்பட வில்லை.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
ஏற்றுக் கொள்ளப்பட்ட பிரேரனைகள்தான் இதில் வரும். கட்டாக்காலி மாடுகள் பற்றி சென்ற சபையிலும் பேசி தீர்மானம் எடுத்தோம். அதனால்தான் எடுக்கவில்லை.

**கௌரவ உறுப்பினர் எஸ். எம்.எஸ். நிலுவ்பா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, இதனை பிரேரனையாக கொண்டு வந்ததற்குக் காரணம் கட்டாக்காலி மாடுகளினால் வீதியோரங்களில் நிறுத்தி வைக்கின்ற வாகனங்கள் உட்பட பாதசாரிகள் வரை விபத்துக்குள்ளாகின்ற நிலை வருகின்றது. அதனால் நாம் மாடுகளுக்கு

நடவடிக்கை எடுக்க முடியாது. எனவே, மாடுகள் வளர்ப்பவர்களுக்கு தகுந்த நடவடிக்கை எடுக்காத பட்சத்தில் எமது ஊரில் விபத்துக்கள் அதிகரிக்கக்கூடிய வாய்ப்புக்கள் உள்ளது,

எமது ஊரில் மாடு வளர்ப்பவர்கள் எங்காவது மாடு கன்று ஈன்டு கிடந்தால் எங்களது மாடுதான் என்று கூறி அவைகளைக் கொண்டு செல்கின்றார்கள். ஆனால் மாடு இறந்து கிடந்தால் எவரும் வருவதில்லை. எமது ஊரின் அபிவிருத்தியில் இதுவும் முக்கியமான விடயமாகும். எனவே, இனிவரும் காலங்களில் கட்டாகாலி மாடுகள் எமது ஊரில் நடமாற்றம் இல்லாமல் செய்வது சபையின் கடமை என்று கூறிக் கொள்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
கட்டாக்காலி மாடுகளின் சொந்தக் காரர்கள் யார்? என்று இணங்கானுவதற்கு எவரும் இல்லை. ஆனால் சிலர் இன்னாருடைய மாடு என்று என்னிடம் கூறுவார்கள். ஆனால் அவரிடம் கேட்டால் எனக்குரிய மாடல்ல என்று கூறுவார். நம்பிக்கையாளர் சபையிடம் நீங்கள் மஹல்லா ரீதியில் மாடுகளை யார் வெளியில் விடுகின்றார்கள் என்று இனங்கானுங்கள் என்று கூறினேன். அதற்கு அவர்கள் எந்த நடவடிக்கையும் எடுக்க வில்லை. எனவே, அடுத்தகட்ட நடவடிக்கையை பொலிசுடன் இணைந்து மாடுகளை அடைப்பதற்குரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

**கௌரவ உப தவிசாளர் வீ. ஜெயச்சந்திரன் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, அம்பாரையில் நான் கடமையாற்றுகின்ற பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்தின் அருகிலே உள்ள இடத்தில் அம்பாரை நகருக்குள் நடமாடும் கட்டாக்காலி மாடுகளை பிடித்துக் கட்டி வைத்து விட்டு பொலிசினால் நீதி மன்றத்திற்கு பாரம் கொடுத்து 2000 அல்லது 3000 ரூபா தண்டப் பணமாக அறவீடு செய்து விட்டு மாடுகள் வழங்கப்படுகின்றது. அதே போல் நமது சம்மாந்துறை நகரத்தை அழகு படுத்த வேண்டுமென்றால் நிச்சயமாக பொலிஸ் நடவடிக்கை எடுத்து சட்ட ரீதியான தண்டப்பணத்தை அறவிடக்கூடிய ஏற்படுகளைச் செய்ய வேண்டும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
எதிர்வரும் வெள்ளிக் கிழமை ஜும்மாவின் பின்னர் அறிவித்தல் செய்து பொலீசுடன் இணைந்து அதற்கான நடவடிக்கையை மேற்கொள்வோம்.

**கௌரவ உறுப்பினர் கே.எல். சிஹாமா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, சென்ற மாதங்களில் சம்மாந்துறை ஆரம்பிக்கும் கேட்வேயினை பெயின்ட் பூசி அழகு படுத்தியதன் பின்னர் அதற்கு அருகில் இறைச்சிக் கடையை வைத்து பார்ப்பதற்கு அவ்விடம் அசிங்கமான நிலையில் உள்ளது. இதற்கு யார் அனுமதி கொடுத்துள்ளார். அனுமதி பெற்றாரா என்று விளங்கவில்லை. வியாபாரம் செய்வதுதான் நோக்கம். அதில் பிழையில்லை ஆனால் அதனை உள்ரீதியாக செய்தால் அழகாக இருக்கும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
சபையில் சமர்ப்பிக்கப்படுகின்ற ஆவணங்களை சரியாக படிக்கவில்லை என்று நினைக்கின்றேன். காலாகாலமாக நெல்லுப்பிடிச் சந்தி ஆட்டிறைச்சிக்கடை என்று அழைக்கப்பட்டு வந்தது. அதற்கு ஒவ்வொரு வருடமும் விலைமனுக் கோருவதுண்டு. ஆனால் எவரும் விண்ணப்பிப்பதில்லை. இந்தவருடம் ஒரு நபர் எடுத்துள்ளார். அவை அமைந்துள்ள இடம் பொருத்தமானதா? என்பதனை பார்க்க வேண்டும்.

**கௌரவ உறுப்பினர் கே.எல். சிஹாமா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, நீங்கள் கூறுவது விளங்கிவிட்டது. ஆனால் கேட்வேயிற்கு அருகில் இருக்க வேண்டாம் என்பதுதான் எனது கருத்து.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
வீதியில் வைக்க முடியாது. நான் இன்னும் அதனை பார்க்க வில்லை. அவ்வாறு செய்வதற்கு RDA அனுமதி வழங்காது. அதனைப் பார்வையிட்டு அதற்கான நடவடிக்கை எடுப்போம்.

**கௌரவ உப தவிசாளர் வீ. ஜெயச்சந்திரன் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, கடந்த தேர்தல் காலத்திலே கொந்தராத்துக் காரர்களால் இஸ்மாயில்புரம் வீதி அபிவிருத்தி செய்வதற்காக பாரிய அளவில் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டது. வீதி செப்பனிடப்பட்டு கிறவல் போடப்பட்ட பின்னர் அதற்குத் தேவையான அனைத்துப் பொருட்களும் அவ்விடத்தில் வைக்கப்பட்டது. ஆனால் தேர்தல் முடிந்ததும் இடையில் அவ்வேலைகள் நின்று விட்டது. இவ் வேலைத்திட்டம் நகர திட்டமிடல் அமைச்சினூடாக செய்யப்பட்ட வேலை. அதனை எமது பிரதேசத்தைச் சேர்ந்த பாயீஸ் எனும் கொந்தராத்துக் காரர் செய்திருந்தார். அவரிடம் ஏன் இதனை இடையில் நிறுத்தியுள்ளீர்கள்? என்று கேட்ட போது அதற்கு ஒதுக்கப்பட்ட நிதியும் கொடுப்பனவுக்குரிய மதிப்பீட்டறிக்கைக்குரிய தொகையும் குறைவாக இருக்கின்றதனால் அதனை அதிகரித்துத் தருமாறு கோரியுள்ளேன். இன்று வரை அனுமதி கிடைக் வில்லை. எனவே, அதனை என்னால் செய்ய முடியாமல் இருக்கின்றதென்று கூறினார்.

நகர திட்டமிடல் அமைச்சுக்கு முன் மொழிவிவை அல்லது சிபார்சினை அனுப்ப வேண்டும் என்று சபையினூடாக நான் பிரேரனை ஒன்றை முன்வைக்கின்றேன். ஏனென்றால் அவ்வீதி மிகவும் அத்தியவசியமான வீதி. சுனாமியினால் பாதிக்கப்பட்ட மக்கள் வாழ்கின்ற மிகவும் பின்தங்கிய பிரதேசம். பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளரிடமும் இதனை சீர் செய்து தாருங்கள் என்று கூறிய போது, ஏன் இதனை உங்களது சபையில் பிரேரனையாக முன்வைத்து செயற்படுத்த முடியாதென்று என்னிடம் கேட்டார். எனவே, நான் உங்கள் அனைவரிடமும் வேண்டிக் கொள்வது அதனை சீர் செய்வதற்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்குவதோடு செயலாளர் அமைச்சுக்கு பிரேரனையாக தெரியப்படுத்துமாறும் கேட்டுக் கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம். மாஹிர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, அமைச்சின் குறைபாடல்ல. மதிப்பீட்டறிக்கை தயாரித்த தொழில்நுட்ப உத்தியோகத்தரின் குறைபாடு. அவ்வீதி மாத்திரமல்ல வண்டுவாய்க்கால் வீதி, மல் 2ம் வீதி போன்ற வீதிகளும் அவ்வாறே. எனவே, இதனை எமது சபைதான் பாரமெடுத்து செய்ய வேண்டும். ஏனென்றால் சபையில் கடமையாற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தர் மதிப்பீட்டறிக்கை தயாரித்தார். இதனால் சம்மாந்துறை அபிவிருத்திக்குக் கிடைக்க வேண்டிய பணங்கள் விரயமாகிவிட்டது.

2017ம் ஆண்டு 10 ஆம் மாதம் நிறைவடைய வேண்டிய வேலைகள் 2018 ஆம் ஆண்டும் நிறைவடையாமல் 2019 ஆம் ஆண்டுக்கும் இந்தப் பிரச்சினை வந்து கொண்டிருக்கின்றது. நான் 02 கிழமைக்கு முதல் கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளரை சந்தித்த போது அவரும் இதே பிரச்சினையைக் கூறினார். எதிர்வரும் 16ம் திகதி சம்மாந்துறைக்கு வருவதாகவும் அன்றைய தினம் கௌரவ தவிசாளர் அவர்களையும் கொந்தராத்துக் காரர்களையும் அழைத்து அதனை ஒரு முடிவுக்கு கொண்டுவருவதாக கூறினார். ஆனால் பாரிய பொறுப்பு நமது சபைக்கு இருக்கின்றது. தகுதி இல்லாத தொழில்நுட்ப உத்தியோகத்தரால் தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு அறிக்கையால் கோடிக்கணக்கான ரூபாய்களை சம்மாந்துறை இழந்து நிற்கின்றது. அவர் தற்போது இங்கு கடமையாற்றவில்லை. எனவே, அதனை எவ்வாறு நிவர்த்தி செய்ய வேண்டும் என்று நமது சபை ஆராய வேண்டும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
சென்ற வருடம் கௌரவ நகர திட்டமிடல் அமைச்சர் றவுப் ஹக்கிம் அவர்கள் இங்கு வந்த போது ஆராயப்பட்டு ஒரு தீர்மானம் எடுக்கப்பட்டாலும் சீராக நடைமுறைப் படுத்தப்படவில்லை. கௌரவ உறுப்பினர் மாஹிர் அவர்கள் உள்ளூராட்சி ஆணையாளரிடம் இருக்கும் போது அவர் என்னிடமும் இது பற்றிக் கூறினார். கௌரவ அமைச்சரும் 19,20ம் திகதிகளில் சம்மாந்துறைக்கு வருவதாக

இருக்கின்றது. அந்தக் கலந்துரையாடலின் முடிவை எடுத்து நமது சபையினால் ஏற்பட்ட தொழில்நுட்ப கோளாருகளை நிவர்த்தி செய்ய வேண்டும்.

**கௌரவ உறுப்பினர் ஏ. அச்சி முஹம்மட் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, மல் 2ம் வீதி முக்கியமான பிரமுகர்கள் இருக்கின்ற வீதி அது வருடக்கணக்காக இழுபறியில் இருக்கின்றது. அதற்கு தகுந்த நடவடிக்கையை கௌரவ உறுப்பினர் அவர்களும் எடுக்க வேண்டும்.

**கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம். மாஹிர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, நான் உள்ளூராட்சி ஆணையாளர் அவர்களிடம் இருந்த போது அவர் கௌரவ தவிசாளர் அவர்களுக்கு தொலைபேசி மூலம் இது தொடர்பாக பேசிய போது அதற்கான பூரண பொறுப்பை நமது சபை ஏற்றுக் கொண்டால் ஒரு கிழமைக்குள் இவைகள் பூரணமடையலாம்.

**கௌரவ உறுப்பினர் ஏ. அச்சி முஹம்மட் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, இதனை நாம் கண்டிப்பாக நடைமுறைப்படுத்த வேண்டும். கௌரவ உப தவிசாளர் அவர்கள் கூறிய ஊரில்தான் வளத்தாப்பிட்டியின் சரித்திரமே அடங்கியுள்ளது. அம்பாரை நகரத்திற்கு ஒத்த நகரமாகத்தான் அதனை ஆரம்ப ஒப்பந்தமாக இருக்கின்றது. தற்போது அவை நமது கட்டுப்பாட்டுக்குள் இருக்கின்றது. கௌரவ நகர திட்டமிடல் அமைச்சுடன் நெருக்கமானவர்கள் இது தொடர்பான மிகவும் ஆழமான முறையில் அபிவிருத்திகளில் செயற்படுகின்றனர். இதற்கு அவசரமாக நமது சபையால் செய்ய முடியுமாக இருந்தால் அதனை செய்தால்தான் மக்களுக்கு பிரயோசனமாக இருக்கும் என்பது எனது தாழ்மையான வேண்டுகோள்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
கௌரவ உறுப்பினர் மாஹிர் கூறியவாறு சில வேலைகளில் நமது தொழில்நுட்ப உத்தியோகத்தருக்கு அனுபவம் போதாது. மேற்கூறப்பட்ட வேலைத்திட்டம் பிரதேச சபை தொழில்நுட்ப உத்தியோகத்தர்களுக்கு அப்பாற்பட்ட வேலைத்திட்டம். அதற்கு மதிப்பீட்டறிக்கை தயாரிக்கக் கூடிய அனுபவம் போதாது. எனவே, சபை தான் இதனை பொறுப்பெடுக்க வேண்டும் காரணம் சபையால் ஆரம்பிக்காமல் RDA அல்லது RDD இடம் மதிப்பீட்டறிக்கை தயாரிப்பதற்கு கொடுத்திருக்க வேண்டும்.

**கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம். மாஹிர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, RDA இற்குக் கொடுத்தால் 30% அவர்களுக்கு மேலதிகமாக செலுத்த வேண்டியிருக்கின்றது. 2016 ஆம் ஆண்டு RDD க்கு பாரப்படுத்தப்பட்டு காலம் காணாத காரணத்தினால் அவர்கள் கைவிட்டதனால் 2016 ஆம் ஆண்டில் 4½ கோடி ரூபா பணம் திரும்பிப் போய்விட்டது. மீண்டும் 2017 ஆம் ஆண்டு கொண்டு வந்து 10ம் மாதம் முடிவடைய வேண்டிய வேலைத்திட்டம் முடிவடையவில்லை. 2018 இல் வேறு வேலைகளுக்கு செலவு செய்ய வேண்டிய பணத்தை கொண்டு வந்து அதே வேலைகளுக்குக் கொடுத்தும் அந்த வேலைகள் நடக்கவில்லை. பணமும் திரும்பிவிட்டது. அதே வேலையை 2019ம் ஆண்டும் விடாமல் தீர்க்கமான முடிவொன்றை எடுக்க வேண்டும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
நமது சபையை நாம் பாரம் எடுக்கும் வரையும் வேலைத்திட்டங்களுக்குரிய எந்தத் தகவல்களும் இங்கு இல்லை. மாகாண சபை நேரடிய தொடர்பு கொண்டிருந்தது. ஆனால் நமது சபையில் மதிப்பீட்டறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. பொறியியலாளர் மாறியவுடன் அவர்களுக்குள் இருந்த போட்டி காரணமாக இவ்வாறு நடந்திருக்கலாம். நிச்சயமாக அதனை மிகவும் உண்ணிப்பாக கவனம் செலுத்தி எதிர்வரும் கிழமை அமைச்சரின் வருகையுடன் அதனை நாம் முடிவுக்குக் கொண்டுவர வேண்டும்.

**கௌரவ உறுப்பினர் எம்.எஸ். சரிபா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, சபையில் நீங்கள் கூறியதற்கினங்க ஏரியாவில் இருக்கும் வீதிகள் அபிவிருத்தி செய்யும் போது அந்த உறுப்பினர்களுக்கு தெரியப்படுத்த வேண்டும் என்றும், அந்த இடத்திற்குச் செல்ல வேண்டும் என்பதனை கருத்தில் கொண்டு 2ம் மாதம் 14ம் திகதி சபையின் அங்கீகாரத்துடன் நீர் பாசனத் திணைக்களத்தில் கூட்டம் ஒன்றுக்கு சென்ற போது நீங்கள் என்னை அழைத்து கூட்டம் முடிந்தவுடன் எனது வீட்டிற்கு பின்னுள்ள ஏரியாவில் உள்ள வடிகானையும் காட்டும்படி கூறியதற்கினங்கவே, அன்றைய தினம் நான் பொறியியலாளரிடம் வடிகானை காட்டுவதற்கு சென்று காட்டிவிட்டு திரும்பி வரும் போது இதனைக் காட்டுவதற்கு என்ன தேவை என்று கானுக்கு சொந்தமில்லாத ஒருவரினால் தாக்கப்பட்டேன்.

அது தொடர்பாக உங்களிடம் கூறுவதற்கு தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டேன் ஆனால் முடியவில்லை. பின் சபையின் செயலாளரிடம் கூறிவிட்டு பொலிசுக்கு சென்ற போது அங்கு பாராபட்சமான நிலையில் தான் சட்டம் காட்டப்பட்டது. பின் அம்பாரை ASP இடம் சென்ற போது அவரும் இருக்கவில்லை. கௌரவ உப தவிசாளர் அவர்கள் இதனைக் கேள்விப்பட்டு உடனே அவ்விடத்திற்கு வந்து கட்சிக்கு அப்பால் பாராளுமன்ற உறுப்பினர் சிரியானி அவர்கள் பெண் என்ற ரீதியில் எங்களிடம் வந்து நடந்த சம்பவத்தினை கேட்டுவிட்டு பொலிஸ் உத்தியோகத்தருக்கு தொலை பேசியில் பெண் என்ற ரீதியில் நீங்கள் என்ன நடவடிக்கை எடுத்தீர்கள் என்று கேட்டார். அதற்கு அவர் உடனடியாக அவரை அனுப்புங்கள் என்று கூறினார்.

அடுத்த நாள் 11 மணிக்கு அவ்விடத்திற்கு வந்த போது பொலிஸ் பொறுப்பதிகாரி நடந்து கொண்ட விதம் என்னவென்றால் நீங்கள் ஒரு உறுப்பினர் சட்ட ரீதியாக நீங்கள் வந்துள்ளீர்கள். நீங்கள் தாக்கப்பட்டதனால் நானும் உங்களுக்குக் கடமை செய்கின்றேன். அவர்களை நீதிமன்றத்திற்கு அனுப்புகின்றேன் என்று கூறினார். பின்னர் அதுபற்றி எந்தத் தகவலும் எனக்கு கிடைக்கவில்லை. மறுநாள் அவரிடம் சென்று கேட்டபோது உங்களுக்கு தவணைக்குரிய கடிதம் வரும் என்று கூறினார். மீண்டும் பல மாதங்களுக்குப் பிறகு 4ம் மாதம் 1ம் திகதி நீதி மன்றத்தில் இருந்து வந்த கடிதத்தில் நான் அவர்களைத் தாக்கியதாகவே வந்தது.

இவ்வாறான தவறான செயல்கள் நடப்பது, நான் ஒரு பெண் வேட்பாளர் தாக்கப்பட்டது என்று எந்த உறுப்பினருமே அதனைக் கரிசனை கொள்ளாவிட்டாலும் நான் அதனை கரிசனை கொள்கின்றேன். ஆனால் சபையூடாக எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இதனால் எனக்கு அனுமதி வந்த வீதிகளை சென்று பார்வையிட முடியாத நிலையில் இருக்கின்றேன். ஏனென்றால் மீண்டும் எதிரிகளால் இப்பிரச்சினைகள் ஏற்படலாம். இதுவரையும் அதற்கான எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
இது பற்றி நீங்கள் எழுத்து மூலமாக சபைக்கு தரவில்லை. ஏனென்னறால் சட்டபூர்வமாக எழுத்து மூலம் தந்தால் நான் அதனை வைத்து எழுத்து மூலம் OIC இடம் கேட்கலாம். சபை உறுப்பினராக பொது பிரச்சினைக்கு போகும் போது நிச்சயமாக சபையின் தவிசாளர் என்ற ரீதியில் உங்களுக்கு ஆதரவாக இருக்க வேண்டும். ஆனால் நீங்கள் என்னிடம் எழுத்து மூலமாக தரவேண்டும். எதையும் சட்டமூலமாகத்தான் நடவடிக்கை எடுக்க முடியும்.

**கௌரவ உறுப்பினர் ஏ. அச்சி முஹம்மட் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, எங்களது உறுப்பினர் தாக்கப்பட்டதற்கு நாம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**கௌரவ உறுப்பினர் ஏ. யூசுப் லெவ்வை அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, எமது மல் 2ம் வீதி, இஸ்மாயில் புர வீதியில் இடம் பெற்ற தவறுகள், பிழைகள் எமது பிரதேசத்தில் இடம்பெறுகின்றது. இதற்கு அனுபவம் குறைந்த உத்தியோகத்தரின் செயற்பாடுதான் காரணம் என நீங்கள் கூறியிருந்தீர்கள். கடந்த காலகட்டத்தில்

அப்பிரதேசத்தில் இருக்கின்ற அனேகமான பிரதேசத்தின் பாதைகளை காபட் இட்டு செப்பனிட்டிருக்கின்றார்கள். அதனை வினவிய போது அப்பாதைகள் RDA மூலம் வந்தபடியினால் தான் அவைகளைச் செய்யக் கூடியதாக இருந்தது.

மாகாண சபைக்குரிய பாதைகளை அவர்கள் செய்யமாட்டார்கள். ஆகவே, இது சம்பந்தமான பொறியியலாளருடன் பேசிய போது எமது ஊரில் அதிகமான பாதைகள் இருக்கின்றது. அதில் முக்கியமான பாதைகளை RDA இடம் கொடுக்கப்பட்டால் அரசாங்கம் செய்கின்ற விசேட வேலைத் திட்டத்தில் பாதைகளை திருப்திகரமாக்கலாம் என கூறியிருந்தார். எனவே, எமது பிரதேசங்களில் இவ்வாறான பிரச்சினைகள் தொடர்ந்து இடம்பெறாமல் இருப்பதற்கு RDA இற்கு எமது முக்கியமான பாதைகளை விட்டுக் கொடுப்பதன் மூலம் ஊர் முன்னேற்றமடையும் என்பது எனது கருத்து. LADPD இல் எனது பிரேரணைகளையும் சமர்ப்பிக்கின்றேன். அதனையும் சேர்த்துக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
பாதைகளைப் பொறுத்தவரை நமது ஊரில் பிரதான வீதிகள், பஸார் வீதி, சம்மாந்துறை வீதி, மல்காம்பிட்டி வீதி போன்றவைகள் RDA க்குரிய பாதைகள். குறுக்கு வீதிகள், பிரதான வீதிகள் RDD க்குரிய பாதைகள். மற்ற உள் வீதிகள் அனைத்தும் பிரதேச சபைக்குரியது. அதனை நாம் RDA, RDD க்கு பாரம் கொடுக்க முடியாது. காரணம் RDD க்கு வருவதற்குரிய அகலம், நீளம் போன்ற கட்டுப்பாடுக்கள் இருக்க வேண்டும் என்ற ஒரு வரையறை இருக்க வேண்டும்.

ஆனால் அம்பாரை ஒரு நகரம். நான் கூறியதற்கு காரணம் பிரதேச சபை தொழில்நுட்ப உத்தியோகத்தருக்கு அதில் அனுபவம் இல்லை. அதன் நுனுக்கங்கள் தெரியாததை மேல் இடத்தில் கண்காணித்திருக்க வேண்டும். துரதிஸ்டவசமாக நடந்துவிட்டது. கௌரவ உறுப்பினர் மாஹிர் கூறியவாறு அதனை RDA க்கு கொடுக்காத காரணம் இன்னும் 30% அதிகமாக தேவைப்படும் என்பதற்காகத்தான்.

**கௌரவ உறுப்பினர் ஏ.சீ.எம். சஹீல் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, அம்பாரை 12ம் வீதியின் இரு பக்க வடிகான்களும் மண் நிரம்பிக் காணப்படுவதனால் அதற்குள் வருகின்ற நீர் தேங்கி நிற்கின்றது. இது தொடர்பாக நான் சபைக்கு வரும்முன் ஆரம்ப காலத்தில் 03 தடவைகள் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு அறிவித்திருக்கின்றேன். ஏனென்றால் வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் அமைக்கப்பட்ட வடிகானின் சில் உயர்ந்து காணப்படுவதனால் எமது வடிகானில் மண் நிரம்பக் கூடிய சாத்தியம் அதிகமாக இருக்கின்றது. இது தொடர்பாக எமது சபை கவனத்தில் கொண்டு அவசரமாக மக்களுக்கு சூழல் பிரச்சினை ஏற்படுத்தா வண்ணம் அதனைச் செயற்படுத்துமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
இதில் இருக்கின்ற பாரிய பிரச்சினை என்னவென்றால் RDA கான்களுக்குள் எமது கான்கள் இணைகின்றது. மண்ணை துப்பரவு செய்வதனை நாம் செய்யலாம்.

**கௌரவ உறுப்பினர் ஏ.சீ.எம். சஹீல் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, பல தடவைகள் எமது ஊழியர்களைக் கொண்டு துப்பரவு செய்துள்ளோம். இருந்தும் சில் உயரமாக இருப்பதனால் எவ்வளவோ துப்பரவு செய்தாலும் முடியாமல் உள்ளது.

**கௌரவ உறுப்பினர் ஐ.எல். எம். மாஹிர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, எதிர்வருகின்ற பிரதேச அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் CTB Work Shop பிரச்சினையை முடிவுக்கு கொண்டு வருவதற்காக அவர்களுக்கு மாற்று காணி வழங்குவதற்கான பிரேரணையை கொண்டு வருமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
CTB Work shop க்குரிய காணி இனங்காணப்பட்டு JCB இன் மூலம் 2 மணித்தியாலயம் அவ்விடத்தை துப்பரவு செய்து கொடுக்கப்பட்டுள்ளது. ஆனால் அவர்களுக்கு கட்டடம் இல்லை அது பற்றி பேசலாம்.

**கௌரவ உறுப்பினர் ஐ.எல். எம். மாஹிர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, நகர திட்டமிடல் அமைச்சினால் செய்யப்பட்ட பாதைகளுக்கு இன்னும் பெயர் பலகை இடப்படவில்லை.

கல்லரிச்சலில் இருக்கின்ற சிறுவர் பூங்காவிற்கு அருகில் உள்ள பாதை செய்யப்பட்டு மிகுதியாக இருக்கின்ற பாதைகளை பொது மக்களால் சுபீகரிக்கின்ற நிலை காணப்படுகின்றது. அப்பாதை மிகவும் மோசமான நிலையில் இருப்பதனால் அவைகளை சீர் செய்து சிரமதானம் செய்வதற்கு சபையின் வாகனங்களை தருமாறு வேண்டுகின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
பாதைகளுக்கான பெயர் பலகையிடல் விடயம் இன்றே முடிக்க வேண்டும். சிரமதானம் செய்வதற்குரிய ஆயத்தங்களை செய்து விட்டு கேளுங்கள் வாகனங்களை நாங்கள் தருகின்றோம்.

**கௌரவ உறுப்பினர் எஸ். நளீம் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, கடந்த எமது அமர்வின் போது கௌரவ உறுப்பினர் மாஹிர் அவர்களினால் முன் வைக்கப்பட்ட பிரேரணை கைகாட்டி சிறுவர் பூங்காவிற்கு அருகாமையில் இருக்கின்ற சம்மாந்துறை பிரதேச செயலகத்தினால் பராமரிக்கப்பட்டு வருகின்ற கட்டடத்தில் வாசிகசாலை இயங்கி வந்தது. தற்போது அவ் வாசிகசாலை இயங்காமல் உள்ளது. அதனை மீண்டும் ஆரம்பிப்பதாக முடிவுசெய்யப்பட்டது. இன்று வரையும் அது சம்பந்தமான நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை.

நகர திட்டமிடல் அமைச்சினால் செய்யப்பட்டு எம்மிடம் கையளிக்கப்பட்ட 02 சிறுவர் பூங்காக்களுக்குரிய காவலாளிகள் நியமிப்பது சம்பந்தமாக இத்தோடு 04 அமர்விலும் பேசப்பட்டிருக்கின்றது. தற்போது காவலாளிகள் போடப்பட்டிருந்தாலும் புதிதாக காவலாளிகள் போடப்படவில்லை.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
காவலாளிகள் போடப்பட்டுள்ளார்கள் அதற்காக மாத்திரம் தனியாக காவலாளிகள் எடுக்க முடியாது எல்லாவற்றிற்கும் சேர்த்து மொத்தமாக இந்த மாத இறுதியில் அறிவித்தல் வரும். அதன் பின் புதிதாக நியமனங்கள் வழங்கும் போது புதிய காவலாளிகள் போடப்படும்.

**கௌரவ உறுப்பினர் எஸ். நளீம் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, இன்று எமது ஊரில் அதிகமான வேலைத்திட்டங்கள் மூலம் பாதைகள் அபிவிருத்தி செய்யப்பட்டு வருகின்றன. கம்பரெலிய வேலைத்திட்டம், நகர திட்டமிடல் அமைச்சின் வேலைத்திட்டங்கள், உள்ளூராட்சி அமைச்சின் வேலைத்திட்டங்கள் என்று பல திட்டங்களின் ஊடாக பாதைகள் சீரமைக்கப்படுவது ஏற்றுக் கொள்ளப்படக்கூடிய விடயம். ஆனால் பாதைகள் சரியான முறையில், திட்டமிட்ட முறையில் அமைக்கப்படவில்லை என்பதற்கு சரியான உதாரணங்கள் உள்ளது. எந்தப் பாதைகளுமே வடிகான் இல்லாத பாதைகளாகவே உள்ளது. எனவே, பாதைகளைப் பாதுகாக்கப்பட வேண்டிய பொறுப்பு எமது சபையிடம் இருக்கின்றது. அதனை பாதுகாப்பதாயின் வடிகான்களை அமைக்க வேண்டும். அதற்குரிய முழுப் பொறுப்பும் எமது சபையிடம் இருக்கின்றது. குறிப்பிட்ட சில முக்கியமான பாதைகள் வடிகான் இல்லாமல் அமைக்கப்பட்டுள்ளது. அப் பாதைகளுக்கு வடிகான் அமைக்க வேண்டும் என்பதனையும் கேட்டுக் கொண்டு,

கௌரவ உறுப்பினர் சரீபா அவர்கள் முன் வைத்த வடிகான் பிரச்சினை தொடர்பாக அந்த பிரதேசத்தை நன்கு பரீட்சாத்தியம் அடைந்தவன் என்பதனாலும், எனக்கு சொந்தமான இடமும் அப் பிரதேசத்தில் இருக்கின்றது அந்த வகையில் அதனை நன்றாக விளங்கியவன் என்ற வகையில் குறித்த S - 24ம் வாய்க்காலில் இருந்து செல்லப்படுகின்ற வடிகானுக்கூடாக அடைமழை பெய்கின்ற காலம் உப்புரி மலை குறிப்பாக மலையடி 4ம் வீதியில் இருக்கின்ற நீர் அவ் வடிகானூடாகத்தான் ஆண்டியர் சந்தி ஊடாக அல்லையை வந்தடைகின்ற வடிகான். குறிப்பிட்ட ஒரு சில நபர்களுடைய தேவைக்காக வடிகான் மூடப்பட்டுள்ளது. எனவே ஊரினுடைய தேவை என்பதற்காக வடிகானை மக்கள் பாவனைக்காக எமது சபை ஊடாக நாங்கள் பெற்றுக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் எம்.எஸ். சரிபா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, பெண்கள் பிரதிநிதிகளுக்கான பயிற்சி நெறி ஒன்றை ESBF நிறுவனம் நடாத்த இருப்பதால் அதனை அம்பாரை மாவட்டத்தில் உள்ள பெண் உறுப்பினர்கள் அனைவருக்கும் சம்மாந்துறையில் நடாத்த வேண்டும் என்று நாங்கள் கேட்டுக் கொண்டோம். அதற்கிணங்க சம்மாந்துறை பிரதேச சபையில் நடாத்துவதற்கு சபையூடாக அனுமதி வழங்குமாறும் ஒத்துழைப்பு வழங்குமாறும் கேட்டுக் கொள்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
அந் நிறுவனம் சபையிடம் எழுத்து மூலம் கேட்குமாறு கூறுங்கள் காரணம் பெண்களுக்கு வலுவூட்டல் நிகழ்வு நடாத்துகின்ற நிறுவனங்கள் அனைத்தும் NGO கள் அவர்கள் இதற்காகவென்று பணம் பெற்று செய்கின்றார்கள். அவர்கள் உத்தியோகபூர்வமாக சபையிடம் அனுமதி கேட்டு எழுதினால் அதற்குரிய நடவடிக்கையை மேற் கொள்ளலாம்.

**கௌரவ உறுப்பினர் எஸ். எம்.எஸ். நிலுவ்பா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, அவர்களது அந் நிகழ்வு நிறைவடைந்து விட்டது. மீண்டும் அதனை அம்பாரை மாவட்டத்தில் உள்ள பெண் உறுப்பினர்களுக்கும் அவர்கள் நடாத்துவதற்கு நாங்கள் எழுத்து மூலம் அனுப்புவதோடு சபைக்கும் சமர்ப்பிக்க வேண்டும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
நீங்கள் எழுத்து மூலம் சபைக்கு சமர்ப்பியுங்கள்.

**கௌரவ உறுப்பினர் ஏ.எம்.எம். றியாஸ் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, Road inventory இதுவரைக்கும் பூரணப்படுத்தப்படாமல் உள்ளது அதனை விரைவாக முடிக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
Road Inventory உள்ளது அதற்குரிய பெயர்கள் இன்னும் வர உள்ளது. 2 மாத காலத்துக்குள் முடிக்கலாம் என்று கூறியவனாக சபையின் அமர்வு இனிதே முடிகின்றது.

AM.முஹம்மட் நௌசாட்
தவிசாளர்
சம்மாந்துறை பிரதேச சபை.

செயலாளர்
சம்மாந்துறை பிரதேச சபை
சம்மாந்துறை.